[1971 ஜூலை 19

Master Plan for Mahabalipuram

* 314 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state the details of the Master Plan for the development of Mahabalipuram?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாமல்லபுரத்தின் அபிவிருத்திக்காக இம் மாநில அரசு 1968-69-ஆம் ஆண்டில் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு பெருந் திட்டம் தயாரித்தது. ஆனால் இந்திய அரசு இதை ஏற்றுக் கொள்ளவில்லை. மாமல்ல புரத்திற்கு நிதி உதவி பற்றியும் ஒன்றும் குறிப்பிடவில்லை. மாமல்லபுரத்திற்கு ஒரு பெருந் திட்டத்தினை வரைவதற்கும் கடற்கரையை அபிவிருத்தி செய்து, இப் பகுதியை அகில உலக சுற்றுலா இடமாக மாற்றியமைப்பதற்கு உதவி செய்ய கடற்கரை அபிவிருத்தி சம்பந்தப்பட்ட நிபுணர்களை அனுப்பி வைக்க, இந்திய அரசு ஒத்துக் கொண்டது. இந்திய அரசின் நிபுணர் களுடன் ஆலோசனை செய்து, விரைவில் அமைக்கப்படவிருக்கும் தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மாமல்லபுரத்திற்கான பெருந் திட்டத்தின் முழு விவரங்களை முடிவு செய்யும்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, ஒரு கோடி ரூபாய் செலவிலே நாம் திட்டம் போட்டு அனுப்பியும் மத்திய அரசாங்கம் ஒத்துக் கொள்ளவில்லை என்று சொன்னார்கள். இருந்தாலும் நம்முடைய அரசாங்கமே திட்டத்தை ஏற்று நடத்துவதற்குச் செயற்குறிப்பு ஏதேனும் இருக்கின்றதா ? அதை இப்பொழுது செய்கிற நேரத்திலே லைட் அண்ட் சவுண்ட் ஒளி-ஒலி அமைப்பு மாமல்லபுரத்திலே அமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக இப்பொழுது இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின்படி ஒரு சுற்றுலாப் பயணிகள் விடுதியில் ஒரு நபர் தங்குகிற விடுதிகள் 18-ம் இரண்டு நபர் தங்குகிற விடுதி நான்கும் இதை 6 லட்சத்து 58 ஆயிரம் ரூபாய் செலவு செய்யவும் நடுத்தர வருவாய் உள்ள குடும்பத்தினருக்காக இரு நபர் தங்கும் விடுதி 50 கட்டுவதற்காக 9 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயும், நடுத்தர மத்திய மக்கள் மற்ற எல்லோரும் சிற்றுண்டி அருந்துவதற்கான சுற்றுலா விடுதியைக் கட்டுவதற்காக 1 லட்சம் ரூபாயும், படகுக் காகவும், படகு வீடு கட்டுவதற்காகவும் 1 லட்சம் ரூபாயும், கார் பார்க் ஏற்படுத்துவதற்காக முப்பதாயிரம் ரூபாயும், பேதிங் காட் கடற்கரைக் கோயிலுக்குப் பக்கத்தில் அமைப்பதற்காக 30 ஆயிரம் ரூபாயும் ஸ்டால்கள் ஏற்படுத்துவதற்காக முப்பதாயிரம் ரூபாயும் சிறுவர் பூங்காவிற்காக ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாயும், கடற்கரையைச் சுற்றி அழகுப்படுத்தவும், கடற்கரையிலே அழகுக் குடைகள் அமைக்கவும், குளித்துவிட்டு உடுப்பை மாற்றிக்கொள் வதற்காக வசதி செய்யவும் ஆகிய இம்மூன்றுக்கும் 1 லட்சம்

1971 ஜூலை 19]

ரூபாயும், சுகாதார முறைப்படி குடிநீர் தருவதற்காக அங்கே ஒரு டவுன்ஷிப், டூரிஸ்ட் சென்ட்டர் உருவாக்குவதற்காக 8 லட்சம் ரூபாயும், மருத்துவ விடுதிக்காக 2 லட்சம் ரூபாயும், பஸ் ஸ்டாண்டு வசதிகள் செய்வதற்காக 2 லட்சம் ரூபாயும், சுற்றுலாப் பயணிகள் நிறுத்துவதற்காக கார் பார்க் வசதி செய்வதற்காக 2 லட்சம் ரூபாயும் மின்சார வசதிக்காக 2 லட்சம் ரூபாயும் மற்றபடி பாதைகளை மாற்றியமைப்பது போன்றவற்றிற்காக 1 லட்சம் ரூபாயும் ஆக மொத்தம் 33 லட்சத்து 48 ஆயிரம் செலவிலே ஒரு திட்டம் நிறைவேற்ற முடிவு செய்யப்பட்டு மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, நம்முடைய அரசு ஒரு கோடி ரூபாயிலே ஒரு திட்டத்தைப் போட்டு அனுப்பியிருக்கிறது இந்தியப் பேரரசுக்கு. ஆனால் இந்தியப் பேரரசு ஒப்புதல் அளிக்கவில்லை என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். என்ன காரணத்தினால் அவர்கள் ஒப்புதல் அளிக்க மறுத்திருக்கிறார்கள்? தமிழ் நாட்டில் வேறு எந்தச் சுற்றுலா இடங்களுக்காக இந்தியப் பேரரசு பணம் கொடுத்திருக்கிறது ? அதேபோல் வடக்கேயிருக்கின்ற மாநிலங்களுக்கு இதுபோன்று அவர்கள் திட்டத்தைக் கொடுத்து ஒப்புதல் அளித்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவரவர்களே, சுற்றுலாத் துறையின் மூலம் ஒவ்வொரு பகுதியாக அவர்கள் வளப் படுத்திக் கொண்டு வருவதாகச் சொல்கிறார்கள். அதன்படி தெற்கே திருவனந்தபுரத்திற்கருகே இருக்கிற கோவளம் கடற்கரையை இந்த ஆண்டு எடுத்து இருக்கின்றார்கள். ஒவ்வொரு கடற்கரையாக தான் எடுத்துக் கொண்டு வர முடியுமென்ற பதிலைத் தெரிவித்திருக்கிறார்கள்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, ஒரு கோடி ரூபாய் பணச் செலவிலே மகாபலிபுரத்திற்குச் சில திட்டங்களைப் போட்டு மத்திய சர்க்காருக்கு எடுத்துக் கூறியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இதை முழுக்க முழுக்க மத்திய சர்க்காரிடத்திலே இந்த அரசு எதிர்பார்க்கிறதா அல்லது ஒரு பங்காக ஏதாகிலும் குறிப்பிட்டு மத்திய சர்க்காரிடம் கேட்டிருக்கின்றார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, மகாபலிபுரம் வெளிநாட்டுப் பயணிகள் பலரைக் கவரக்கூடிய விதத்திலே அமைந்திருக்கிறது. ஆனால் அதற்கான வசதிகள் பல இல்லை என்று கூறப்படுகிறது. குறிப்பாக பார் அட்டாச்ட் ஹோட்டல் இனிமேல் ஆரம்பிக்கப்படுமா ? ஸ்விம்மிங் பூல் ஒன்று ஆரம்பிக்கப்படுமா ? அதைப்போல் கைடுகளாகப் படித்த

[1971 ஜூலை 19

இளம் பெண்களைப் போட்டால் வெளிநாட்டினருக்குச் சொல்லிக் கொடுக்க வசதியாகயிருக்கும். இதை அரசாங்கம் கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவரவர்களே, மகாபலிபுரத்தைப் பொறுத்த வரையில் நல்ல அளவிற்குக் கைடுகள் இங்கிருந்து போகிறார்கள், அதிலே குறை இல்லை. பார் அட்டாச்ட் ஹோட்டல் என்று சொன்னார்கள். அது சென்னைக்கு வருகிற வெளிநாட்டுப் பயணிகளுக்கு இங்கே நல்ல அளவில் தேவையான பர்மிட்டுகள் கொடுக்கப்படுவதால் வெளிநாட்டுப் பயணிகளைப் பொறுத்த வரையில் அதிலே சங்கடங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. உள்நாட்டுப் பயணிகளுக்கு எப்படி என்று தெரியவில்லை, ஸ்விம்மிங் பூல் போன்றவைகளையும், மற்றவை களையும் ஏற்பாடு செய்ய அரசு திட்டங்களைத் தயாரித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கேள்வியும் இது சம்பந்தமுடையதுதான், அதையும் எடுத்துக் கொள்ளலாம்.

சென்னை-மாமல்லபுரம் கடற்கரை

* 315 வினா—திரு. சு. துரைசாமி :

திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

சென்னையிலிருந்து மகாபலிபுரம் வரை உள்ள கடற்கரை ஓரங்களில் அழகுபடுத்தும் முறையில் பூக்கள் வைத்து பராமரிக்க அரசுக்கு உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : செங்கற்பட்டு மாவட்டத்தி லுள்ள முட்டுக்காடு என்ற கடற்கரை கிராமத்திலிருந்து மகாபலிபுரம் கடற்கரை வரை பலவகை மரங்கள் வைத்து கடற்கரையை அழகு செய்யும் செயத் குறிப்பு ஒன்று அரசினுடைய ஆலோசனையிலிருந்து வருகிறது. இதற்காக எவ்வளவு செலவாகும், எவ்வகையில் கடற்கரையை அழகுபடுத்தலாம் என்ற விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, சென்னையிலே இருந்து மகாபலிபுரம் வரையில் கடற்கரையை அழகுபடுத்தினால் பலர் வந்து நம்முடைய நாட்டுக் கடற்கரையைப் பார்ப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கும். அதேநேரத்தில் வெளிநாட்டிலேயிருந்து வருபவர்கள் தங்குவதற்கு சுற்றுலா மாளிகைகளை இடையிடையே அமைக்க ஏதாவது திட்டம் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவரவர்களே, முட்டுக்காட்டிலிருந்து மகாபலிபுரம் வரையில் ஒரு அழகிய கடற்கரை, நம்முடைய கிழக்கு வங்கக் கடற்கரை இருக்கிறது என்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.